Registered as a Newspaper at the G.P.O

விலை ரூபா-10.00

# தினக்குரல்

தினக்குரல் THINAKKURAL

An Independent Daily Voice in Tamil

ஓசை : 05
குரல் : 145

விய வருடம் ஆவணி மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை றஜபு 27 ஹிஜ்ரி வருடம் 1427 Daily, Yarl Thinakkural Tuesday 22nd August 2006. Phone: 2222127 Fax:2223735 பக்கங்கள் - 04

இணையதள முகவரி
www.thinakural.com

## யாழிலிருந்து வெளியேற கண்காணிப்புக் குழு முடிவு!

இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழு தற்காலிகமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற தீர்மானித்துள்ளது.

யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தற்போதைய தலைவர் ஊல்வ் ஹென்றிக்சன் இரு தரப்பும் மோதல்கள் நடைபெறும் பகுதிக்கு கண்காணிப்பு குழுவை அனுமதிக்காததை கருத்தில் கொண்டே இந்த முடிவை எடுத்துள்ளார்.

இது கண்காணிப்பு குழு எதிர்காலத்தில் புதிய தலைமையில் செயற்படுவதற்கான

(2ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூரில் சித்திரத்தேர் இன்று வலம்வராது!

குடாநாட்டில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, நல்லைக் கந்தன் ஆலய சித்திரத்தேர்ப் பவனி இன்று இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் உள்வீதியில் மட்டும் சிறிய தேரில் முருகப்பெருமான் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார். காலநிலையைக் கருத்திற்கொண்டு மிகவும் எளிமையான முறையில் தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது.

(2ஆம் பக்கம் பார்க்க)

# மோதலைத் தவிர்ப்பதற்கு புலிகள் முன்வந்தால் பரிசீலிக்க அரசு தயார்

## இணைத்தலைமை நாடுகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



மோதல் தவிர்ப்பு ஒன்றை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முன்வருவார்களேயானால் அது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க தயார் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுடன் நேற்று திங்கட்கிழமை சந்திப்பொன்றை மேற்கொண்ட வேளையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரி

## வட பகுதி வரவுள்ள கப்பலை ஜனாதிபதி பார்வையிட்டார்!

யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் செல்லும் கப்பலை நேற்று திங்கட்கிழமை இரவு ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

3,800 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களுடன் இக் கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்தை நோக்கி புறப்பட்டுச் வரவுள்ளது.

இதேவேளை, உணவுப் பொருட்களுடன் மேலும் இரண்டு கப்பல்களை பருத்தித்துறை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் ஜனாதிப்தி செயலகம் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அடுத்த வாரம் 2,000 மெட்

(2ஆம் பக்கம் பார்க்க)



துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் சமாதான முயற்சியின் தற்போதைய நிலை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் குறித்து இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து கருத்து பரிமாறினர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு பதி

(2ஆம் பக்கம் பார்க்க)

நோக்கி புறப்பட்டுச் வரவுள்ளது.

(2ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.ஆஸ்பத்திரிக்கு அவசர மருந்துப் பொருட்கள் ஹெலியில் அனுப்பி வைப்பு!

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு தேவையான ஒட்சிசன் மற்றும் மயக்க மருந்து, வாயு என்பன ஹெலிகொப்டர் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

யாழ். வைத்தியசால்ல நிர்வாகம் விடுத்த அவசர வேண்டுகோளுக்கு இணங்க சுகாதார துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, யாழ்.வைத்தியசாலைக்கு அவசரமாக தேவைப்படும் மருந்துப் பொருட்களை உடன் அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அமைச்சரின் உத்தரவுக்கு இணங்க அநுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து ஒட்சிசன் மற்றும் மயக்க மருந்து வாயு, ஏனைய அவசிய மருந்துப் பொருட்கள் என்பனவும் இவ்வாறு ஹெலி மூலம் எடுத்துச் செல்லப்

(2ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்பு குழுவின் புதிய தலைவராக நோர்வேயின் முன்னாள் இராணுவ அதிகாரி

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக நோர்வே முன்னாள் இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் லார்ஸ் ஜோன் சோல்வ் பேர்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதிக்குள் வெளியேறிவிட வேண்டுமென விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வந்த நிலையில், கண்காணிப்புக் குழுவில் அங்

(2ஆம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைப் பெண் ஊழியர் சுட்டுக் கொலை!

வவுனியா, செட்டிகுளம் பொலிஸ் பிரிவிலுள்ள வாரிக்குட்டியூரில் நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பெண்

(2ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் பகுதிக்குள் அகப்பட்டிருந்த வெளிமாவட்ட மக்கள் வெளியேறினர்

யாழ்.குடா நாட்டில் கடும் மோதல்கள் வெடித்ததையடுத்து, 'ஏ-9' வீதி மூடப்பட்டதால் வன்னிக்குள் அகப்பட்டிருந்த பெருமளவான வெளிமாவட்ட மக்கள் நேற்று திங்கட்கிழமை ஓமந்தை சோதனை நிலையமூடாக வவுனியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

யாழ். குடாவில் முகமாலை பகுதியில் கடந்த 11 ஆம் திகதி மாலை வெடித்த கடும் மோதலையடுத்து 'ஏ-9' வீதி மூடப்பட்டது.

வெளிமாவட்டங்களிலிருந்து பல்வேறு தேவைகளுக்கும் வன்னிக்குச் சென்ற

(2ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை நிலைவரம் குறித்து ஆராய ஐ.நா.விற்கு ஆசிய மனித உரிமை அமைப்பு வேண்டுகோள்!

இலங்கையில் நீடித்து வரும் படுகொலைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஹொங்கொங்கை தலைமையிடமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


இலங்கை வன்முறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் மற்றும் பாப்பரசர் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஆனால், இலங்கையில் நடைபெற்ற பல தாக்குதல் சம்பவங்கள் எதிலுமே விசாரணை நடத்தப்படவில்லை.

சர்வதேச நிறுவனங்கள் விசாரணைகள் மேற்கொள்வதும் தடை செய்யப்படுகிறது.

இனப்பிரச்சினை உள்ள பகுதிகளில் தொடர்பு கொள்வது சிக்கலாக இருப்பதாக சர்வதேச ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இரு தரப்பு மோதல்களால் ஏற்படும் அவல நிலைமைகளை வெளிப்படுத்தும் விதமாக முஸ்லிம் மக்களின் நிலைமை

(2ஆம் பக்கம் பார்க்க)



பிரித்தானிய பிரதமர் ரோனி பிளேயரின் காரியாலயத்திற்கு முன்பாக செஞ்சோலை மாணவிகளின் கொலையை கண்டித்து இலங்கை அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்வதைக் காணலாம்.

# முல்லைப் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயரின் காரியாலயத்துக்கு முன்பாக இலங்கை அரசின் முல்லைத்தீவு படுகொலையை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த கண்டன ஆர்பாட்டம் தொடர்ந்து 4 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இதனை தமிழ் மக்கள் அமைப்புகளால் ஒன்றிணைத்து நடத்தப்படுகின்றது.

# கடமைக்கு சமுகமளிக்கவும்

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிமன்ற உத்தியோகத்தர்களும் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும் வேளைகளில் தத்தமது இடங்களிலுள்ள நீதிமன்றங்களிற்கு கட்டாயம் சமுகமளிக்க வேண்டுமென பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அறிவித்துள்ளார்.

வடமராட்சி, மற்றும் தென்மராட்சிப் பகுதிகளில் வதிவோர் வேறு நீதிமன்றங்களில் பணியாற்றுபவர்களாக இருந்தாலும் அருகிலுள்ள நீதிமன்றங்களுக்குச் சமுகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுட்டுக்கொல்லப்பட்ட சிவமகாராசாவின் சடலம் நேற்று உறவினரிடம் ஒப்படைப்பு!



தெல்லிப்பழை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சுட்டுக்கொலை செய்யப்பட்ட முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசாவின் சடலம் நீதிவான் விசாரணைகளின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. தெல்லிப்பழையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இவர் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங்கோவன்,

(2ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழரைப் பாதிக்கும் அறிக்கைகளை தவிர்க்குமாறு கலைஞர் வேண்டுகோள்!

ஈழத் தமிழர்களை பாதிக்கும் வகையில் அறிக்கை விடுவதை அரசியல் கட்சித் தலைவர்கள் தவிர்க்க வேண்டும் என தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று உரையாற்றிய காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரன், ஈழத்தமிழர்கள் குறித்து தமிழகத்தில் சில் அரசியல் கட்சிகள் பேசி வருவதை கு பிட்டுப் பேசினார்.

(2ஆம் பக்கம் பார்க்க)

தினக்குரல்
THINAKKURAL
நொதேர்ன் பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம்: 336, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 2222127 பக்ஸ்: 2223735

# கலைஞர் கருணாநிதிக்கு....

**வ**ன்னியில் 'செஞ்சோலை' அனாதைச் சிறுமிகள் பராமரிப்பு நிலையத்தின் மீது கடந்த வாரம் இலங்கை விமானப் படையின் போர் விமானங்கள் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதல்களில் 61 அப்பாவி மாணவிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் பிரதிபலிப்பு குறித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்ட சபைக் குழுத் தலைவர் எம்.கண்ணப்பன் கடந்த் சனிக்கிழமை கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்கு பதிலளித்து உரையாற்றுகையில் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி தெரிவித்த கருத்துக்கள் எமது கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கின்றன.

கலைஞரின் அன்றைய பதிலுரை அண்மைக் காலத்தில் அவர் இலங்கை இன நெருக்கடி தொடர்பில் நிகழ்த்திய நீண்ட தொரு உரையாகவும் அமைந்திருந்தது எனலாம். ஊகங்களின் அடிப்படையில் திரித்துக் கூறப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டே செஞ்சோலை மீதான தாக்குதல் தொடர்பில் தமிழக சட்ட சபை தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதாக சென்னையில் உள்ள இலங்கை உதவித் தூதரகம் அறிக்கையை வெளியிட்டிருந்தது. தூதரகத்தின் இவ்வறிக்கையைக் கண்டனம் செய்த கண்ணப்பன் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்களுக்காக இந்திய மத்திய அரசாங்கம் இலங்கையைக் கண்டனம் செய்யாதது குறித்தும் வருத்தம் தெரிவித்தார். கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேளையில் சட்ட சபையில் கலைஞர் கருணாநிதி இருக்கவில்லை. தான் சபையில் பிரசன்னமாக இல்லாத போதிலும்கூட, தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதைச் சுட்டிக் காட்டிய கலைஞர், ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழர்கள் இன ஒற்றுமையோடு இருப்பார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்று சொன்னார். சட்ட சபைத் தீர்மானம் தவறானது என்று இலங்கை உதவித் தூதரகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த கலைஞர், தமிழன் கொல்லப்பட்டதைத் தமிழன் கண்டிப்பது தவறு என்றால், அந்தத் தவறைத் தமிழன் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பான் என்று தனக்கேயுரித்தான பாணியில் கூறினார்.

ஏற்கனவே இருதசாப்த கால உள்நாட்டுப் போரின் அவலங்களில் இருந்து மீள முடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கைத் தமிழ் மக்கள் மீண்டும் அவலத்திற்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், கடந்த சில வருடகால மந்த நிலையிலிருந்து மெல்ல மெல்லவிடுபட்டு ஒருமைப்பாட்டுக் குரலெழுப்ப ஆரம்பித்திருக்கும் தமிழக அரசியல் கட்சிகளுக்கும் முதலமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அதேவேளை, கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து இலங்கையில் உள்ள தங்கள் சகோதரர்களுக்காக குரலெழுப்பும் தமிழக மக்களின் உணர்வுகளை மழுங்கச் செய்யக் கூடிய எந்தவொரு காரியத்திலும் மாநில அரசியல் தலைவர்கள் இறங்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கின்றோம். சட்டசபையில் அன்றைய தினம் கலைஞர் தனதுரையில் குறிப்பிட்ட சில விடயங்களே இந்த வேண்டுகோளை முன்வைப்பதற்கு எம்மை நிர்ப்பந்தித்திருக்கின்றன.

'இலங்கைத் தமிழர் பிரச்சினை என்பது இந்தியாவைப் பொறுத்தவரையில் இரு காலகட்டங்களை உள்ளடக்கியதாகும். ஒரு காலகட்டம் ராஜீவ் காந்தி கொலைக்கு முன்னரானது மற்றைய காலகட்டம் அவரது கொலைக்குப் பின்னரானது. ராஜீவ் காந்திக்கு பின் என்கிற காலகட்டம் உருவாகாமல் இருந்திருக்குமேயானால், இப்பொழுது இலங்கைத் தமிழர்களின் நிலையே வேறு. ராஜீவ் காந்தி நம்முடைய தமிழ் மண்ணிலே இரத்தம் சிந்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி அந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு இந்தியாவிலே இருந்த அனுதாபம், எழுச்சி, உணர்ச்சி, வேகம் இவைகளெல்லாம் எந்த அளவுக்கு மாய்ந்து போயின என்பதற்கு கடந்த ஆண்டு இதே சட்ட சபையில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா படிக்க அந்த தீர்மான வாச

## ஈழத்தமிழரைப் பாதிக்கும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பதிலளித்துப் பேசிய தமிழக முதல்வர் கருணாநிதி, ஈழத்தமிழர்கள் விடயத்தில் அனைவரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் எனவும், தமிழகத்தில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் எண்ணத்தில் ஒன்றாக இருக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும், இலங்கைத் தமிழர்கள் குறித்து அரசியல் கட்சித் தலைவர்கள் அறிக்கை விட்டு அவர்களை புண்படுத்த வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். இதேவேளை சட்டசபையில் நேற்று கண்ணப்பன் (ம.தி.மு.க.) பேசியதாவது:

சனிக்கிழமை எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு வைகோ, பத்திரிகை வாயிலாக பதில் கூறி இருக்கிறார். குறிப்பிட்ட திகதியில் அந்த சம்பவம் நடைபெறவில்லை என்று வைகோ கூறி உள்ளார். விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது என்றாலும் விடுதலைப் புலிகளுக்கு தார்மீக ஆதரவு கொடுத்துப் பேசுவது தவறு இல்லை என்று உயர் நீதிமன்றம் கூறி உள்ளது. அதற்காக சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்க சிறிதும் அனுமதிக்க முடியாது. விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவியோ, ஆயுத உதவியோ செய்யாமல் தார்மீக ஆதரவு கொடுப்பது தவறு அல்ல. ஆயுதம் தாங்கிப் போராடுவதாகவும் நாட்டைப் பிரிப்பதாகவும் யாராவது பேசி இருந்தால் அதை நாங்கள் ஒத்துக் கொள்ளமாட்டோம். அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசி இருக்கலாம். அவர்கள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கலாம். வைகோ அன்றைய சூழ்நிலையில் கடல் மார்க்கமாக இலங்கை சென்று திரும்பி இருக்கிறார்.

இதையடுத்து, ஜி.கே.மணி (பா.ம.க.), சுதர்சனம் (காங்.), சிவ புண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்) உட்பட பலர் பேசினார்கள். அப்போது இந்த ஆட்சி 100 ஆவது நாள் சாதனை குறித்தும் இலங்கைப் பிரச்சினை பற்றியும் பேசினார்கள்.

இதற்கு முதலமைச்சர் கருணாநிதி பதில் அளித்து கூறியதாவது:

''ஆட்சியின் 100 நாள் சாதனைக்கு வாழ்த்துத் தெரிவித்த அனைவருக்கும் நன்றி. பொதுப் பணித்துறை அமைச்சர் துரைமுருகன் நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் வகையில் உடல் நலத்துடன் இந்த அவைக்கு வந்திருக்கிறார்.

நமது வாழ்த்தெல்லாம் அவருக்கு மருந்தாக அமைந்திருக்கிறது. சிலர் மனதளவில் வாழ்த்துகிறார்கள். அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி. 100 நாள் ஆட்சிக்கு சோனியா காந்தி வாழ்த்துத் தெரிவித்து இருக்கிறார். அவருக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து கொள்கிறேன்.

எதிர்ப்பும் அரவணைப்பும் இருந்தால்தான் எதுவும் இயங்க முடியும். உங்கள் அனைவரின் அன்பால், கருணையால், ஆதரவால் இந்த ஆட்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சனிக்கிழமை இந்த அவையில் நான் பேசிய கருத்து குறித்து அருமை நண்பர் கண்ணப்பன் குறிப்பிட்டார். அவருடைய கட்சித் தலைவர் சம்பவம் நடந்த திகதி பற்றி தவறாக குறிப்பிட்டதாக கூறி இருக்கிறார். ஒரு வேளை வயதான காரணத்தால் திகதியில் தவறு ஏற்பட்டு இருக்கலாம். செய்தியில் தவறு இல்லை. திகதியும் சரியானதுதான். கோபால் சாமி அன்றைய தினம் திடீரென்று இலங்கைக்கு கடல் வழியாக மர்மபயணம் ஒன்றை மேற்கொண்டார். யாருக்கும் சொல்லாமல் அவர் மேற்கொண்ட பயணம் அவரைப் பொறுத்தவரை நல்ல எண்ணத்தோடு, நல்ல குறிக்கோளோடு செய்யப்பட்ட பயணம் என்றாலும் அவர் சொன்ன கருத்து என்னைப் புண்படுத்துகிறது. 1989 ஆம் ஆண்டு அவர் வன்னிக் காட்டுக்கு என்னிடம் சொல்லாமல் பயணம் மேற்கொண்டார். பெப்ரவரி 5 ஆம் திகதி அவர் எழுதி கொடுத்த கடிதம் 24 ஆம் திகதி எனக்குக் கிடைத்தது. பத்திரிகைகளிலும் இந்த செய்தி வந்தது. நான் கலைஞருக்கு எழுதிய கடிதம்சில நாள் தாமதமாக கொடுக்க வேண்டும் என்று அவரே சொன்னதாக செய்திகள் அப்போதே வெளியாகி உள்ளன. ஈழத் தமிழர் வாழ்வில் விடிவு பிறக்கும் என்ற நம்பிக்கையில் ஈழப்போர் நடந்த போதே பிரபாகரனை சந்திக்க சென்றதாகவும் அந்தக் கால கட்டத்தில் நான் தெரியப்படுத்த விரும்பியதை பிரபாகரனிடம் சொல்வதற்காகவும் அவர் போனதாக குறிப்பிட்டுள்ளார்.

இதில் இருந்தே ஜமுக்காளத்தில் வடிகட்டப்பட்டது எது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். எந்த ஒரு கால கட்டத்திலும் ஈழத்தில் சகோதர யுத்தம் கூடாது என்பதை நான் வற்புறுத்தி வருகின்றேன். இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும் நல்ல தீர்வு ஏற்பட வேண்டும். அது என்னால் தான் ஏற்பட்டது என்று இன்னொருவரை கழுத்தைப் பிடித்துத் தள்ளுவதாக இருக்கக் கூடாது.

வைகோ இலங்கை சென்றது ஆர்வம் காரணமாகத் தான். இப்போது இலங்கையில் தமிழர்கள், சிங்கள வெறியர்களால் தாக்கப்படுகிறார்கள்.

தமிழர்களை யார் காப்பாற்றுவது என்று சண்டை போட வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் வாழ்வு நலம் பெற வேண்டியது அவசியம். இங்கு நான் ஆற்றிய உரைக்குப் பிறகு வைகோ பேசினாலும், யார் பேசினாலும் அதை நான் பொருட்படுத்தப் போவது இல்லை. அத்தனை வலியும் எனக்கே வரட்டும். ஈழத்தமிழருக்கு வேதனை தருவதாக இருக்க வேண்டாம்.

## சுட்டுக் கொல்லப்பட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடலத்தைப் பார்வையிட்டு தடயங்களைப் பதிவு செய்தார்.

சடலத்தை தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு அவர் தெல்லிப்பளைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## செஞ்சிலுவைப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நாகராச நவரஞ்சிதம் (வயது- 22) என்ற இளம் யுவதியே அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக செட்டி குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் குமார கமகே தெரிவித்தார்.

முகமூடி அணிந்துகொண்டு வீட்டுக்கு வந்த இருவரே இப் பெண்ணை சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு அங்கு வந்த மக்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்த யுவதியை உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற போது அங்கு அவர்

## இலங்கை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளது. பிரான்சைச் சேர்ந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஆகையால், அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் தங்களது பணியை மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளனர்.

ஆகையால், இலங்கையில் உள்ள பொது மக்களின் உயிர்களை ஐக்கிய நாடுகள் சபை காக்க வேண்டும். இதற்கான இராஜதந்திர ரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள்

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

இதேவேளை, இடம்பெயர்ந்துள்ள மக்களின் சுகாதார தேவைகளை கவனத்தில் கொண்டு, வட கிழக்கு பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிக மருந்துப் பொருட்களையும் வைத்தியர்களையும் அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் சுகா

## சமுகம் அளிக்கவும்!

யாழ்.பண்ணைப் பகுதியில் இயங்கி வந்த இருதய நோய்ச்சிகிச்சை நிலையம் தற்காலிகமாக ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்.பிராந் திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இயங்கி வருவதாக வைத்திய கலாநிதி ஜமுனானந்தா அறிவித்துள்ளார். நோயாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஊரடங்கு தளர்த்தப்படும் நேரத்தில் குறித்த பணிமனைக்கு சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## பதிவுகளை மேற்கொள்ளவும்

வெளிமாவட்டங்களிலிருந்து பல்வேறு தேவைகளின் நிமித்தம் யாழ்.மாவட்டத்துக்கு வந்து மீண்டும் தங்கள் அலுவலகங்களுக்கு கடமைக்குச் செல்ல இயலாமல் தங்கியுள்ள அரச அலுவலர்கள் தமது வரவுப் பதிவுகளை இனிவரும்காலங்களில் தமது வதிவிடத்துக்கு அண்மையிலுள்ள பிரதேச செயலகம்/ உதவி அரசாங்க அதிபர் அலுவலக பணிமனைகளில் மேற்கொள்ளும் படி யாழ்.மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார்.(ச)

நிலைமை ஏற்பட்டது. அப்படி அந்த நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு இந்தியாவிலே இருந்த அனுதாபம், எழுச்சி, உணர்ச்சி, வேகம் இவைகளெல்லாம் எந்த அளவுக்கு மாய்ந்து போயின என்பதற்கு கடந்த ஆண்டு இதே சட்டசபையில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா படித்த அந்த தீர்மான வாசகங்களே போதும். எந்தளவுக்கு அவர் அந்தப் பிரச்சினையை அணுகினார்? எவ்வளவு கோபத்தோடும் வெறுப்போடும் அந்தப் பிரச்சினையை அணுகினார்? அதற்கு என்ன காரணம் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். அதே மனோநிலைதான் சகலருக்கும் இருந்தது. அதனால்தான் ராஜீவ் காந்திக்குப் பின் - ராஜீவ் காந்திக்கு முன் என்று கி.பி., கி.மு. என்று பிரித்துக் கொள்வதைப் போல இதைப்பிரித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். இருந்தாலும் கூட, இன்றைய சூழ்நிலையில் நம்முடைய தமிழர்கள் தொப்புள் கொடி உறவு கொண்டவர்கள். நம்முடைய சகோதரர்கள், இனமக்களாகிய அவர்கள் இலங்கையிலே கொல்லப்படுகிறார்கள். வேட்டையாடப்படுகிறார்கள். பழிவாங்கப்படுகிறார்கள் என்ற செய்தி எமக்கு இனிப்பானதல்ல. நம்மை கணைகொண்டு தாக்குகின்ற அளவுக்கு மோசமானது. அப்படிப்பட்ட செய்திகளைத் தாங்கிக் கொண்டு நாம் இன்றைக்கு இருப்பதற்கு சில சூழ்நிலைகளே காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது. மறந்துவிடவும் முடியாது. இவைகளையெல்லாம் வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கின்றோம்' என்று கலைஞர் விளக்கமளித்திருக்கிறார்.

இந்தக் கருத்துக்களைச் சொல்வதற்கு கலைஞருக்கு இருக்கின்ற உரிமையை எவரும் மறுதலிப்பதற்கில்லை. ஆனால், அக்கருத்துக்களை சொல்லுகின்ற நேரம், முறை எத்தகைய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய மகத்தான பொறுப்புடைய ஒரு அந்தஸ்தில் கலைஞர் இருக்கிறார் என்பதே எமதுகருத்து. விடுதலை புலிகளுடனான விவகாரங்களைக் கலைஞர் கையாளுகின்றவிதம் எப்போதுமே அவர்களுக்கு விரோதமான ஒரு அணுகுமுறையைக் கொண்டிருக்கும் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல. ராஜீவ் காந்திக்கு முன் - ராஜீவ் காந்திக்கு பின் என்று கால கட்டப் பிரிப்பொன்றை செய்வதற்கு இது உகந்த நேரமா? இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டதன் பின்னரான காலகட்ட நிகழ்வுகள் தமிழ் மக்களின் வேதனைக்குரியவை. அந்த கசப்பான காலகட்ட நிகழ்வுகளின் விளைவான உணர்வுகளில் இருந்து காலப்போக்கில் தமிழக மக்கள் விடுபட்டு, இப்போது அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்ற தங்கள் இலங்கைச் சகோதரர்களுக்காக - கலைஞரின் வார்த்தைகளில் தொப்புள் கொடி உறவுகளுக்காக - ஒருமைப்பாட்டுக் குரலை மீண்டும் ஒலிக்க ஆரம்பித்திருக்கும் தருணத்தில் பழைய துன்பியல் சம்பவங்களை நினைவுபடுத்துவதன் மூலம் தமிழக மக்களின் உணர்வுகள் எந்தளவுக்கு அதைரியப்படுத்தப்படக்கூடும் என்பதை ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சட்ட சபையில் கலைஞர் நிகழ்த்திய உரையில் அவர் சொல்லியவற்றை விட அவற்றின் உள்நோக்கம்தான் முக்கியமானது. கலைஞரின் உரையின் தொனியில் ஒரு செய்தி அடங்கி யிருக்கிறது. ஆனால், இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, இன்று முக்கியமானது எது? அவர்களது போராட்டத்தின் இன்றையநிலை காரணமாகத்தான் இலங்கை நெருக்கடி குறித்து உலகமே பேசுகிறது. உலகமே பேசும்போது இந்தியா குறிப்பாக, தமிழகம் மௌனம் சாதிக்கிறது என்றுதான் இலங்கைத் தமிழர்கள் கவலையடைந்தார்கள். அந்த துரதிர்ஷ்டவசமான நிலையில் மாறுதல் ஏற்பட்டு தமிழக மக்கள் மத்தியில் அனுதாப உணர்வு வளர்ந்து வருவதை சீர்குலைக்கக்கூடியதாக எதையுமே தமிழகத் தலைவர்கள் செய்துவிடக் கூடாது. சட்ட சபையில் கலைஞர் தெரிவித்த கருத்துகள் இலங்கை அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்றன.

வெறுமனே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் தமிழகத்தின் முதலமைச்சராகவும் மாத்திரமல்ல, உலகத் தமிழர்களின் தலைவராகக் கருதப்பட வேண்டுமென்று விரும்புகின்ற கலைஞர், இன்றைய தருணத்தில் இவ்வாறு பேசியதனால் யாருக்கு நன்மை? ராஜீவ் காந்திக்கு பின் - ராஜீவ் காந்திக்கு முன் என்ற காலகட்டப் பிரிப்பைச் செய்கின்ற அவர், இலங்கைத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கின்றார் என்பதை தெளிவுபடுத்தவும் கடமைப்பட்டவர். 'நெஞ்சுக்கு நீதி' எழுதிய கலைஞர் இனப்படுகொலைக்கு உள்ளாகும் இலங்கைத் தமிழர்களுக்கு எழுதப்போகும் நீதி என்ன? தொடர்ந்தும் தமிழன் 'ஒரு தவறைச்' செய்துகொண்டி ருப்பான் என்று தனது உரையில் பிரகடனம் செய்த அவர், செய்யக்கூடாத தவறு எது என்பதையும் நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டும்!

வந்த மக்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்த யுவதியை உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற போது அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக செட்டிகுளம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மிக நீண்ட காலமாக இந்த யுவதி செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளையில் கடமையாற்றி வந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம் வகித்த சுவீடன், டென்மார்க் மற்றும் பின்லாந்து பிரதிநிதிகள் அதிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதற்கமைய கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவரும் சுவீடன் நாட்டவருமான மேஜர் ஜெனரல் உல்வ் ஹென்றிக்சனும் வெளியேறுவதால் கண்காணிப்புக்கு புதிய தலைவரொருவரை நோர்வே நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2005 ஆம் ஆண்டு நோர்வே இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஜோன் சோல்வ் பேர்க் (54 வயது), அதற்கு முன்னர் நான்கு வருடங்கள் 6 ஆவது படையணியின் தளபதியாக இருந்தார்.

தனது சேவைக் காலத்தில் இவர் இராணுவத்தின் காலாட் படைப் பிரிவு, கவசப் படை பிரிவு மற்றும் டாங்கிப் படையணியிலும் முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

அமெரிக்க இராணுவ போர் பயிற்சிக் கல்லூரியில் 1998 இல் பட்டப்படிப்பை பூர்த்தி செய்ததுடன் அமெரிக்க இராணுவ கட்டளை மற்றும் பொது அதிகாரிகள் கல்லூரியிலும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார். நோர்வே இராணுவ அக்கடமியிலும் (1977) இவர் பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளார்.

ஓய்வுபெற்ற பின்னர் இவர் ஒஸ்லோவில் ஆலோசனை நிலையமொன்றை நடத்தி வந்தார்.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம், இல. 668 கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த செல்வி வசந்தி சண்முகம் என்பவரின் அடையாள அட்டை (62570 2224 V) பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலடிக்கும் அரசடி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் (யாழ்/பெரியபுலம் பாடசாலைக்கு அருகில்) தயவு செய்து ஒப்படைக்கவும்.


காக்க வேண்டும். இதற்கான இராஜதந்திர ரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## வன்னிப் பகுதிக்குள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவான மக்கள் இதனால் அங்கு அகப்பட்டுக் கொண்டனர்.

கடந்த பத்து நாட்களாக இங்கு அகப்பட்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், ஓமந்தை சோதனை நிலையத்தை திறந்து தங்களை வவுனியாவுக்குள் செல்ல அனுமதிக்குமாறு, அங்குள்ள தொண்டர் அமைப்புகள் மூலம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில், அவர்களை வவுனியாவுக்குள் அனுமதிக்க படையினரும் மறுத்து வந்தனர்.

எனினும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பொது அமைப்புகள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக, நேற்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் ஓமந்தை சோதனை நிலையமூடாக வன்னிக்குள்ளிருந்து வெளிமாவட்ட மக்களை வவுனியாவுக்குள் வர அனுமதிப்பதாக படையினர் தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியான நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் வன்னிக்குள்ளிருந்து வவுனியாவுக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வரவிருந்தனர்.

எனினும், கடைசி நேரத்தில் ஏற்பட்ட இழுபறியால், ஓமந்தை சோதனை நிலையம் பிற்பகல் 2.30 மணியளவிலேயே திறக்கப்பட்டது.

அங்கிருந்து பெருமளவான மக்கள் வவுனியா வந்தனர். எனினும் வாகனங்கள் எதுவும் அங்கிருந்து வவுனியாவுக்குள் வர அனுமதிக்கவில்லை.

இதேநேரம், வவுனியாவிலிருந்தும் ஒரு தொகுதி மக்கள் நேற்று வன்னிக்குச் சென்றனர். இந்தப் போக்குவரத்துகளுக்காக ஓமந்தை சோதனை நிலையம் மாலை ஐந்து மணிவரை திறக்கப்பட்டிருந்தது.

## நல்லூரில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, சப்பறத் திருவிழா உற்சவமான நேற்றும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வெளி வீதியில் சப்பறத்தில் முருகப் பெருமான் எழுந்தருளவில்லை.

## யாழிலிருந்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிபுரியும் என அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களை கவனத்தில் கொண்டு, வட கிழக்கு பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மேலதிக மருந்துப் பொருட்களையும் வைத்தியர்களையும் அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக அறியவருகிறது.

யாழ். குடாநாட்டில் தொடரும் ஊரடங்குச் சட்டம், இராணுவம், புலிகளுக்கிடையே உக்கிரமடைந்திருக்கும் மோதல் மற்றும் வடகிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான பாதைகள் மூடப்பட்டுள்ளமை ஆகியவற்றால் வடகிழக்கின் பல பிரதேசங்களிலும் மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்ட அரசாங்க அதிபர்கள் தமது பகுதிகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடான, மருந்து பொருட்களின் பெயர், விபரங்கள் குறித்து அவசர கடிதங்களை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதனை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் உறுதிப்படுத்தினார்.

## வட பகுதி வரவுள்ள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிக் தொன் சீனியையும் பருப்பையும் ஏற்றிக் கொண்டு இந்தியக் கப்பலொன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட உணவுக் கப்பல்களில் மிளகாய், கடலை, பால்மா, மருந்து வகைகள் ஆகியவற்றையும அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தரைவழிப் பாதைகளின் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தியுள்ள நிலையில் வடபகுதிக்கான உணவுப் பொருட்களை கடல் வழியாக மக்களுக்கு சென்றடைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் யாழ்ப்பாணத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வதந்திகள் பரவவிடப்பட்டுள்ளதெனவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பீ. திவாரத்ன தெரிவித்துள்ளார்.

## மோதலைத் தவிர்ப்பதற்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லளிக்கும் முகமாகவே பாதுகாப்பு படையின் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் வகையில் தாக்குதல் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லையென ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு திரும்புவதை எந்நேரமும் எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் மேற்கொள்ளப்படும் மோதல் தவிர்ப்பு நடவடிக்கையினை பரிசீலிக்க அரசாங்கம் தயாராகவுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சம்பூர் பகுதியின் திருகோணமலை துறைமுகப் பகுதிக்கும் அதன் சுற்றுப்புறங்களுக்கும் இராணுவ ரீதியிலான அச்சுறுத்தல் எதுவும் ஏற்படாது என்பதை அது உள்ளடக்க வேண்டும்.

ஜனாதிபதி மூதூரில் அரச சார்பற்ற அமைப்பின் பணியாளர்களும் 100 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் இளைஞர்களும் கொல்லப்பட்டமை குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான அத்தியாவசிய பொருள் விநியோகம் குறித்தும் அவர் தெளிவுப்படுத்தினார்.

அரச சார்பற்ற அமைப்புகள் ஆற்றிவரும் பணியையும் பாராட்டிய ஜனாதிபதி, ஐக்கிய நாடுகளினது அமைப்புகளுக்கும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கும் தனது ஆதரவு தொடர்ந்து உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

# போருக்கு எதிராக கோஷமிடும் 'டொலர் காகங்கள்' வன்னிக்குச் சென்று கூட்டத்தை நடத்த வேண்டும்

## விமல் வீரவன்ச கூறுகின்றார்

போருக்கெதிராக கொழும்பில் கோஷங்களை எழுப்பி கூட்டம் நடத்தும் டொலர் காகங்கள் அப்போராட்டத்தை வன்னிக்கு சென்று நடத்த வேண்டுமென சவால் விடும் ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளருமான விமல் வீரவன்ச, பயங்கரவாதிகளுக்கெதிராக வெற்றிகரமான முறையில் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் படையினரின் மனோபலத்தை இழக்கச் செய்வதே இவர்களது நோக்கமாகுமென்றும் தெரிவித்தார்.

தியத்தலாவ விமானப் படைத்தளத்தில் அண்மையில் இடம்பெற்ற நீலோற்பல மலரைப் படையினருக்கு அணிவிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே விமல் வீரவன்ச எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

போருக்கெதிரானவர்களெனக் கூறித்திரியும் டொலர் காகங்கள் இன்று நித்திரையில் எழுந்து நடக்கத் தொடங்கியுள்ளன. ஏனெனில், எமது நடவடிக்கைகள் அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென வலியுறுத்தும் போருக்கெதிரானவர்கள் அவர்களது கூட்டத்தை கிளிநொச்சியில் நடத்த வேண்டுமென வலியுறுத்திய பிக்குமாரைத் தாக்கியுள்ளனர்.

இது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணும் இலட்சணமா?

எனவே , உண்மையாக போருக்கெதிரானவர்களல்ல என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர். அவர்களது வயிற்றுப் பிழைப்புக்காக வருடந்தோறும் போஸ்டரொன்றைத் தூக்கிக் கொண்டு கூச்சலிடவும், கூட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் இவர்களுக்குண்டு.

இந்த வருடத்திலும் இது போன்ற நாடகத்தை நடத்தவில்லையென்றால், டொலர் தொகை கிடைக்காது போய்விடும். மாவிலாறு மூதூர் பகுதிகளில் பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல்களில் எமது படையினர் வெற்றிபெற்றதும் டொலர்கள் கிடைக்காது போய்விடுமென்பதை உணர்ந்தனர்.

எனவேதான், போருக்கெதிரான இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். இதற்கு முன்னரும் "தவலம்", "வெண்தாமரை இயக்கம்" போன்ற அமைப்புகளை ஏற்படுத்தி எமது படைகளின் மனோபலத்தை இழக்கச் செய்தனர்.

இவர்களுக்கு நாம் பயப்படத் தேவையில்லை. அத்தோடு, எதிர்காலத்தில் இந்த டொலர் காகங்களின் "நிர்வாணத்தை" நாட்டிற்குப் பகிரங்கப்படுத்துவோம்.

பயங்கரவாதிகளின் தாளத்திற்கு ஆட்டுவிக்க முடியாத தலைமைத்துவம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ளதென்பதை புலிகள் புரிந்து கொண்டுள்ளனர்.

எனவேதான் புலிகளுக்கெதிரான தாக்குதல்களை இறுதிக் கட்ட யுத்தமென்ற பிரசாரத்தை மேற்கொண்டு நாட்டை பிரிக்கும் நிலைமைக்கு அரசாங்கத்தை தள்ளிவிட்டு நெருக்கடிக்குள்ளாக்கி நாட்டை பிரிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

# முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் 60 லொறிகள் விவகாரம்!

## நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விளக்கம்

நேற்று திங்கட்கிழமை வெளியாகிய "முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டிருந்த 60 லொறிகளின் நிலை என்ன?" என்ற செய்தி உண்மையற்றது என்றும் 11ஆம் திகதி மாலை தாக்குதல் நடைபெறும் வேளையில் இந்த லொறிகள் முகமாலை சோதனைச்சாவடிப் பிரதேசத்தில் இருந்தன. திடீரென ஏற்பட்ட தாக்குதலின் போது லொறிச் சாரதிகள் இவற்றை கைவிட்டுவிட்டு ஓடிப் போயுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பமைச்சின் நடவடிக்கை தலைமை செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த லொறிகள் இன்னும் இந்த இடத்திலேயே கிடக்கின்றன. எந்தவொரு லொறியையும் இராணுவத்தினர் பலாத்காரமாகப் பெறவில்லை. இவற்றைப் பெறுவதற்கு இன்னும் உரிமையாளர்கள் வரவில்லை. யாழ். பிரதேசத்தில் நடைபெறும் தாக்குதலினால் உரிமையாளர்கள் இன்னும் வர முடியாது இருக்கின்றது. இவர்கள் வந்து இவற்றைப் பெறலாம்.

உண்மை இவ்வாறிருக்க, மாறுபட்ட செய்திகளை பத்திரிகையில் வெளியிடுவதன் மூலம் நாட்டைப் பாதுகாக்கும் பாதுகாப்புப் படையினர் அதிருப்தி அடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று திங்கட்கிழமை வெளியாகிய "இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திக்கு யாழ். பல்கலைக் கழக துணை வேந்தர் மறுப்பு" என்ற செய்தி தொடர்பாக நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்திருப்பதாவது;

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாதுகாப்புப் பயினரால் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளையில், பல்கலைக்கழக வளாகத்தினுள் இருந்து பெருந்தொகையான வெடி பொருட்களும், அரசிற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் எதிராக தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டன.

இச் செய்தியை இராணுவ ஊடகப் பிரிவினால் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டு ஒலிபரப்பாக்கியுள்ளது. இச் செய்தியில் எந்தவிதமான தவறும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இடம்பெயர்ந்தோர் மீள் குடியேறிய பின்பே 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை

வடக்கு, கிழக்கில் தற்போதுள்ள போர்ச் சூழல் நீங்கி இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியேறிய பின்னரே ஒத்திவைக்கப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை அப்பிரதேசங்களில் நடத்தக்கூடியதாக இருக்குமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

இது குறித்து பரீட்சைகள் உதவி ஆணையாளர் தர்மசேன கூறுகையில்;

கடந்த 12 ஆம் திகதி திருகோணமலை மாவட்டத்தைத் தவிர, நாட்டின் ஏனைய அனைத்துப் பகுதிகளிலும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும், யாழ்.குடாநாடு மற்றும் சில பிரதேசங்களில் தோன்றிய திடீர் யுத்தச் சூழ்நிலை காரணமாக அப்பிரதேசங்களில் புலமைப் பரிசில் பரீட்சையினை நடத்த முடியாமல் போனது பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கு மீண்டும் பரீட்சையை நடத்துமாறும் இதில் எவ்வகையிலும் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிடக்கூடாதெனவும் கல்வியமைச்சர் பணித்திருந்தார்.

எனினும், தற்போதுள்ள யுத்தச் சூழ்நிலை நீங்கி இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடம் திரும்பும்வரை பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கு பரீட்சையை நடத்த முடியாத நிலையேற்பட்டுள்ளது. எனினும், இது பற்றி ஆராய்ந்து வருகிறோம்.

மேலும், பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டு அவ்விடைத்தாள்கள் திருத்தப்பட்ட பின்னரே ஒன்றாக வெளியிடுவோம்.

## செப்டெம்பர் 8இல் செய்முறைப் பரீட்சை

இம்முறை க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

யுத்தச் சூழ்நிலை வட,கிழக்கில் நீங்கினால் இப்பரீட்சையை நாடு பூராக ஒரே தினத்தில் நடத்தலாம். இல்லையேல், யுத்தச் சூழ்நிலையான பிரதேசங்களில் இச்செய்முறை பரீட்சையையும் ஒத்வைக்கும் நிலையேற்படுமென்றார்.

# வங்காலைக் கிராமத்தை விட்டு 543 பேர் ஒரே நாளில் தமிழகம் சென்றனர்

இலங்கையில் ஒரே நாளில் ஒட்டுமொத்தமாக வங்காலை கிராமத்தை காலி செய்துவிட்டு 543 அகதிகள் தனுஷ் கோடி அரிச்சல் முனைக்கு வந்தனர்.

இலங்கை மன்னார் மாவட்டம் வங்காலை கிராமத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை எராளமானோர் அகதிகளாக தனுஷ் கோடி அரிச்சல் முனையை நோக்கி கண்ணாடியிழைப் படகுகளில் வரத் தொடங்கினர். பிற்பகல் 3.30 மணி வரை 48 படகுகளில் 124 குடும்பங்களைச் சேர்ந்த 543 பேர் அகதிகளாக அரிச்சல் முனை கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

பொலிஸார் விசாரணை நடத்தி இவர்கள் அனைவரையும் மண்டபம் அகதிகள் மறுவாழ்வு முகாமிற்கு அனுப்பி வைத்தனர்.

# தமிழகம் செல்ல முயன்ற 11 படகோட்டிகளுக்கு விளக்க மறியல்

தலைமன்னார் கடற்பரப்பினூடாக தமிழகம் செல்ல முற்பட்டபோது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட 87 பேரில் 11 படகோட்டிகளை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இரு படகுகளில் இவர்கள் சென்று கொண்டிருக்கையில் தலைமன்னார் கடலில் கட ்படையினரால் ..து செய்யப்பட்டனர்.

..ாயிறு மாலை 6.30 மணியளவில் 87 பேரும் தலைம னார் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். நேற்று மாலை இவர்கள் மன்னார் மாவட்ட மேலதிக நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது 11 படகோட்டிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, ஏனையவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

# கண்ணீர் அஞ்சலி



20-08-2006 அன்று
தெல்லிப்பழையில்
படுகொலை செய்யப்பட்ட
நமது ஈழநாடு
நிர்வாக இயக்குநர்

**சின்னத்தம்பி சிவமகாராசா**

அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலிகள்

நமது ஈழநாடு
ஊழியர்கள்

### - முற்றுகைக்குள்ளாகியிருக்கும் குடாநாட்டு மக்களுக்கு -

# மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு இந்தியாவிடம் இலங்கை கோரவில்லை

முற்றுகைக்குள்ளாகியிருக்கும் யாழ். குடாநாட்டுக்கு அவசரமாகத் தேவைப்படும் மனிதாபிமான உதவியை வழங்குமாறு இலங்கை அரசு இதுவரை உத்தியோகபூர்வமான கோரிக்கை எதனையும் இந்தியாவுக்கு விடுக்கவில்லையென டில்லி உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இந்தியாவிடமிருந்து உதவி கோரப்பட்டிருப்பதாகவும் அந்த உதவி கிடைக்குமெனவும் இலங்கை பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்ததாக சனிக்கிழமை செய்திகள் வெளியாகியிருந்தன.

கடந்த ஆகஸ்ட் 11 இற்குப் பின்னர் அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்றுவரும் மோதல்களால் குடாநாட்டிற்கும் ஏனைய பகுதிகளுக்குமான தரை, கடல், ஆகாய மார்க்க தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. இதனால், யாழ்ப்பாணத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை இலங்கை அரசாங்கத்தால் விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இலங்கை இது தொடர்பாக உதவி வழங்குமாறு உத்தியோகபூர்வமாக கேட்டுக் கொண்டால் இந்தியா சாதகமான விதத்தில் பதிலளிக்குமென டில்லி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'இந்துஸ்தான் ரைம்ஸ்' நேற்று தெரிவித்திருந்தது. அதேசமயம் இந்த விடயத்தில் பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் நெருக்கடிகள்**

முதலாவதாக பாதுகாப்பு விடயம் குறித்து இந்தியா மனதில்கொள்ள வேண்டியுள்ளது. இந்த விவகாரத்தில் புலிகளிடமிருந்து உத்தரவாதத்தை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில், யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் முற்றுகைக்குள் உள்ளதால் வடகடலில் கடற்பயணம் பாதுகாப்பானதாக இல்லை.

இந்திய நிவாரணப் படகுகள் கடற்படையின் பாதுகாப்புடன் வருவதென்றால் அது தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து ஆட்சேபனைகள், சந்தேகங்கள் இருக்கக்கூடும்.

கடல்கோள் பேரனர்த்த வேளையில் இலங்கைக்கான அவசர உதவியளிக்கும் விடயத்தில் இந்தியாவின் நடவடிக்கைகள் ஆயுதப்படைகளின் பொறுப்பில் கையளிக்கப்பட வேண்டியிருந்தது.

1987 இல் இந்திய விமானப்படை இலங்கை வான் பரப்புக்குள் ஊடுருவி அச்சமயம் முற்றுகைக்குள்ளாகியிருந்த யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு உணவுப்பொதி, அத்தியாவசியப் பொருட்களை போட்டதை பெரும்பான்மை சிங்களவர்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

1987 இல் இடம்பெற்ற சம்பவமானது 'பருப்பு போட்ட' கதையாக குறிப்பிடப்படுவதுடன் இலங்கையின் இறைமையை மீறியதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதே போன்று மீண்டும் இந்தியாவின் உதவி கருதப்படுவதை அந்நாடு விரும்பவில்லை.

எவ்வாறாயினும், இலங்கையிடமிருந்து உத்தியோகபூர்வமாக உதவி வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் இந்த நெருக்கடிகளையெல்லாம் சமாளிக்கக்கூடிய் வழிவகைகளை இந்தியா கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. பருப்பு, சீனிக்கான தடையை இந்திய வர்த்தக அமைச்சு நீக்கிவிட வேண்டி இருக்கும்.

அத்துடன், பலவகையான பிரச்சினைகளை எதிர்கொள்வதால் தானே நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் பார்க்க ஐ.நா. நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றினை ஈடுபடுத்த முன்வரக்கூடும் அல்லது தனியார் வர்த்தக, கப்பல் துறையை நாடவேண்டி நேரிடும். தமிழ்நாடு - பருத்தித்துறை மார்க்கத்தையே தனியார் வர்த்தகர்கள் பயன்படுத்த வேண்டியிருக்கும். இந்திய உதவி தேவைப்படாமலும் போகலாம். இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்திற்கு கப்பலொன்றை அனுப்ப முயல்கின்றது.

### மன்னார் இராணுவ சோதனை நிலையம்

# திறக்கப்படாததால் மக்கள் ஏமாற்றம்

யாழ். குடாநாட்டில் கடும் மோதல் வெடித்ததைத் தொடர்ந்து மூடப்பட்ட மன்னார் இராணுவ சோதனை நிலையம், நேற்று திங்கட்கிழமை காலை திறக்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதிலும் அது திறக்கப்படாததால் பெருமளவு மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கடைசி நேரம் வரை இதற்கான விடுதலைப் புலிகளின் பதில் கிடைக்காததாலேயே நேற்று சோதனை நிலையம் திறக்கப்படவில்லையென படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி மோதல்கள் ஆரம்பித்ததையடுத்து இந்த சோதனை நிலையம் மூடப்பட்டதால், இதனூடாக விடுதலைப் புலிகளின் பகுதியிலிருந்து மன்னார் நகருக்கு பல்வேறு தேவைகளுக்காகவும் வந்த 200 க்கும் மேற்பட்டோர் கடந்த 10 நாட்களாக இருப்பிடங்களுக்கு திரும்ப முடியாதுள்ளனர்.

இந்த நியில், இவர்களை திருப்பி அனுப்புவதற்காக மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் படைத்தரப்புடன் நடத்தி வந்த பேச்சுக்களின் பலனாக நேற்று திங்கட்கிழமை காலை இந்தப் பாதையை திறக்க படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

எனினும் நேற்று மாலை வரை, இதற்கான புலிகளின் பதில் கிடைக்காததால் நேற்று பாதை திறக்கப்படவில்லை. மன்னார் மற்றும் வவுனியாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இதற்காக பல தடவைகள் முயன்றும் புலிகளின் பதில் கிடைக்கவில்லை.

இதனால், நேற்றைய பயணம் நடைபெறாததுடன் இனி எப்போது இந்தப் பாதை திறக்கப்படுமென்பது குறித்தும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், புலிகளின் பகுதிக்குச் செல்வதற்காக வந்து ஏமாற்றமடைந்தவர்களை மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் தங்கவைத்து பராமரிப்பதற்கான ஏற்பாடுகளையும் அரச அதிபர் செய்துள்ளார்.

இதேநேரம், யாழ். குடாநாட்டைச் சேர்ந்த சுமார் 920 பேர் தற்போது மன்னாரில் புலிகளின் பகுதிக்குள் முடங்கிப் போயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.நோக்கி வரவிருந்த உணவுக் கப்பல் நேற்றும் கொழும்பிலிருந்து புறப்படவில்லை!

## மோசமான காலநிலையே காரணம்

குடாநாட்டிற்கு 250 மில்லியன் ரூபா பெறுமதியான 3 ஆயிரத்து 800 தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு துறைமுகத்திலிருந்து வரவிருந்த கப்பல் காலநிலை சீர்கேட்டால் இன்னும் தனது பயணத்தை நேற்று திங்கட்கிழமை வரை தொடராத நிலையில் யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலை அதிமோசமாக அதிகரித்திருப்பதுடன் பெரும் உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக வட,கிழக்கில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையே உக்கிரமடைந்திருக்கும் கடும் மோதல்களால் வட பகுதிக்கான வீதிகளும் மூடப்பட்டுள்ளன.

அத்துடன் விமான, கடல் மார்க்க பயணங்களும் தடைப்பட்டுள்ளன. இந்நிலையில் யாழ். குடாநாடு உட்பட அதனையண்டிய பகுதிகளை சேர்ந்த மாவட்டங்களில் கையிருப்பில் இருந்த அத்தியாவசிய உணவுப் பொருட்களும் முடிவடைந்து விட்டன.

அரச சார்பற்ற நிறுவனங்களும் உணவுப் பொருட்களை இக் குறித்த பகுதிகளுக்கு கொண்டு போய் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மனிதாபிமான அடிப்படையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை உடன் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு நிறுவனப் பிரதிநிதிகளும் சமூக, சமயத் தலைவர்களும் விடுத்த அவசர வேண்டுகோளுக்கிணங்க, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கப்பல் கடந்த சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவிருந்தது.

எனினும், இக்குறித்த கப்பலில் காலநிலை சீர்கேட்டினால் பொருட்களை ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் கொழும்பிலிருந்து கப்பல் புறப்பட முடியாத நிலையேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, செஞ்சிலுவைச் சங்க வழித்துணையுடன் யாழ். குடாவுக்கு செல்லவிருக்கும் இக்கப்பலின் பயண தாமதம் பற்றி விமர்சனங்கள் எழுந்துள்ளமை குறித்து அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுடன் நேற்று திங்கட்கிழமை மாலை தொடர்பு கொண்டபோது,

காலநிலை சீர்கேட்டால் கப்பல் இன்னும் புறப்படவில்லை. இதனால் பொருட்கள் ஏற்றுவதில் தாமதம் நிலவுகிறது.

சந்தேகப்படும் அளவிற்கு இதில் எந்த கைய சூழ்ச்சிகளும் இல்லையென பதில் கூறப்பட்டது.

### உணவுப் பொருட்களை சேமிக்க கோண்டாவிலில் களஞ்சியம்

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் உணவுப்

# கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கு ஊரடங்கு அனுமதிப்பத்திரம்!

பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து பொருட்களை இறக்கும் பணிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட பாரவூர்திகளுக்கும், சாரதிகளுக்கும் உரிய ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களை தத்தமது பகுதிக்குரிய இராணுவப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களி

பருத்தித்துறை, கட்டைவேலி, உடுப்பிட்டி, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, ப.நோ.கூ.சங்க சமாசம், வேலணை, ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் லொறிகள் பாவிக்கப் பட்வுள்ளன. எனவே, இப்பாரவூர்திகளுக்கான ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களை உடனடியாகப் பெற்று,

சாரதிகளுக்கும் உரிய ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களை தத்தமது பகுதிக்குரிய இராணுவப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், நல்லூர், நீர்வேலி, அச்சுவேலி, அளவெட்டி-மல்லாகம், சுன்னாகம், சங்கானை, மானிப்பாய், தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, புலோலி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் லொறிகள் பாவிக்கப் படவுள்ளன. எனவே, இப்பாரவூர்திகளுக்கான ஊரடங்கு அனுமதிப்பத்திரங்களை உடனடியாகப் பெற்று, இன்று காலை கோண்டாவில் களஞ்சியத்துக்கு பாரவூர்திகளுடன் வரும் சாரதிகள் உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வீ.பத்மநாதனை சந்திக்குமாறு அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

## கோண்டாவிலில் களஞ்சியம்

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் உணவுப் பொருட்களைச் சேமித்து வைக்கும் நோக்குடன் கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள உணவுக் களஞ்சியத்தினை சீர்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2002 ஆம் ஆண்டு ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்படுவதற்கு முன்னர் கப்பல் மூலம் எடுத்துவரப்படும் உணவுப் பொருட்கள் இக்களஞ்சியத்திலேயே சேமிக்கப்பட்டு வந்தது. எனினும், ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் பின்னர் இக்களஞ்சியம் மூடப்பட்டது.

சர வேண்டுகோளுக்கிணங்க, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய கப்பல் கடந்த சனிக்கிழமை கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவிருந்தது.

சந்தேகப்படும் அளவிற்கு இதில் எந்தவித சூழ்ச்சிகளும் இல்லையென அதில் கூறப்பட்டது.

## ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண ரஜினிகாந்த் முயற்சி செய்ய கோரிக்கை

### ரசிகர்கள் உண்ணாவிரதம்

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண ரஜினிகாந்த் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, அவரது ரசிகர்கள் தென்காசியில் ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதம் இருந்தனர்.

தென்காசி திருவள்ளுவர் திடலில் நடைபெற்ற இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ரஜினிகாந்த் இரத்ததானக் கழக நிறுவனர் பூ. திருமாறன் தலைமை வகித்தார்.

விருதுநகர் மாவட்ட துணைச் செயலர் ஜி. குமார், கமுதி ஒன்றியச் செயலர் ஞானசேகரன், ரஜினி பேரவைத் தலைவர் ஜெகன், கடையநல்லூர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுப்பையா பாண்டியன், மேற்கு மாவட்ட இளைஞரணியைச் சேர்ந்த வேல்சாமி, ஆலங்குளம் செல்லையா, சுரேஷ், மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

எஸ்.பி.டி. குமார் போராட்டத்தை தொடக்கிவைத்தார். மணியன் தொடக்கவுரையாற்றினார்.

அருப்புக்கோட்டை பாஸ்கர், ரமேஷ், அந்தோனிராஜ், மண்டைக்காடு கண்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

போராட்டத்தில் ஆனந்த், சீனிவாசன், சங்கரபாண்டியன், ராஜபாண்டியன், அருள்ராஜ், சிவன்மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தை மகளிர் அணியைச் சேர்ந்த பானுமதி முடித்துவைத்தார். முன்னதாக வைத்தியலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பையா தம்பி

பிறப்பு 02-07-1939 இறப்பு 04-09-2005

திதி: பிரதமை 24-08-2006

(ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வதிவிடமாகக் கொண்டவரும், இ.போ. சபையின் மன்னார், மட்டக்களப்புச் சாலைகளின் முன்னாள் நடத்துநரும், கஜமுகன் ஓட்டோ உரிமையாளரும்)

அண்ணனான கஜமுகனை
அகத்திலே ஆதரித்து
தம்பியாய் நீரும் தன்னாட்சி
செய்திருந்தீர்.
விண்ணாட்சி விரும்பி நீரும்
விரைந்ததினால்
வீணர்கள் இங்கே வீண்வாதம்
செய்கின்றனர்.
மீண்டும் பிறந்திங்கே வித்துவம் நீர்
செய்யீரோ?

விழிசிட்டி, ஏழாலை.

உங்கள் நினைவால் துயருறும், குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஈஸ்வரன் துவாரகன்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி ஈஸ்வரன்- குகராணி தம்பதிகளின் புத்திரனும் சிந்துஜாவின் பாசமிகு சகோதரனுமான துவாரகன் 14-08-2006 திங்கட்கிழமை அகால மரணமடைந்தார். இவர் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவனும், நல்லூர் கந்தசுவாமி கோவில் விசேட முதலுதவிப் படையணியைச் சேர்ந்தவரும், மக்கள் நலன்புரி சங்கப்படையணித் தொண்டருமாவார்.

இவரது மரணக் கிரியைகள் 17-08-2006 வியாழக்கிழமை நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி.

சீ.ஈஸ்வரன் (தந்தை)

## மக்கள் வங்கி வேண்டுகோள்

மக்கள் வங்கியின் சகல ஊழியர்களையும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இல்லாத நேரத்தில் தத்தமது கிளைகளுக்கு சமுகமளிக்குமாறு வங்கியின் யாழ்.பிரதேச தலைமையகம் கேட்டுள்ளது.

மேலும், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் குறித்த நேரத்தில் தமக்கு அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளுக்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 1938 - 06 - 28



இறப்பு 2006 - 08 - 20

தெல்லிப்பளை பல நோ.கூ.சங்கத் தலைவரும்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய
சின்னத்தம்பி சிவமகாராசா அவர்கள்

கூட்டுறவு என்றால் சிவமகாராசா.
சிவமகாராசா என்றால் கூட்டுறவு என்று,
வரலாற்றுத் தடம் பதித்த வல்லவனே!
நீங்கள் அகால மரணம் அடைந்த செய்தி
எங்கள் நெஞ்சத்தை பிளக்கிறதே!
உங்கள் நினைவு என்றும் நிலைக்கும்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்க
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பொதுச்சபைப் பிரதிநிதிகள், அங்கத்தவர்கள்.

## இல.செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் பெறலாம்

யாழ்.மாவட்ட மக்கள்-யாழ்.குடாநாட்டிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு தமது பெற்றோர், உற்றார் சுற்றத்தாருக்கு தாம் பாதுகாப்பாகவும் சுகமாகவும் இருப்பதென்ற செய்தியினை அனுப்ப விரும்பினால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளை பொதுமக்களைக் கேட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை, இல 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து தருமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கேட்டுள்ளார். இவை தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொடுக்க செஞ்சிலுவைச் சங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 2வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி ரெட்ணராஜ் விஜிதா தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**இ.ரிதன்**

2ஆவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று (22.08.2006) விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அனைவரும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா

இப்பத்திரிகை நோர்தேண் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, 336 ஆம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.